சிவமயம்



அமரர்.

# திருமதி.மதுராம்பிகை ஸ்ரீநிவாசன்

(கிளிஅக்கா)

அவர்களின்

# 31ம் நாள் நினைவஞ்சலி மலர்

17.02.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உளமகிழ
06.01.1936

உளநெகிழ
18.01.2016

# அமரர்

# திருமதி.மதுராம்பிகை ஸ்ரீநிவாசன்

## (கிளி அக்கா)

## திதி வெண்பா

தாரணியின் திலகம் மதுராம்பிகை என்போர்
தாரணிவோன் றன் கழலைச் சேர்ந்தநாள் பாரறியும்
ஆண்டு மன்மத தை பூர்வ பக்ச நாளது
பூண்ட நவமி திதியெனப் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தேவதையாய் பிறந்து

தேவதையாய் வாழ்ந்து

தேவதையாய் இருந்து

எம்மை காக்கும் உயர்ந்த

ஆத்மாக்கு இம் மலர்

சமர்ப்பணம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே மருவூர் அரசியே
ஓம் சக்தியே ஓம் விநாயகா
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே
ஓம் சக்தி

**அளவிலதே!**

" தாயின் பிரிவுதனைத் தாங்கார் துறவியரும்
ஆயின் துயரம் அளவிலதே! – தீயும்
பரிவோடெரிகின்ற பாசம் மறவாமல்
திரிவோம் எம் நாளும் சில ! "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச தோத்திரங்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

மண்ணுலக கத்திநிந் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்ற டியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலவர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவனே னைக் கருணையி
னாற் கலந்தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டர்ய்விறல் வேங்கையின்றோல்
உடையவனே கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்
பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சொல்லாணட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரன்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாளே
உத்தமா தான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.

# திருமதி.மதுராம்பிகை ஸ்ரீநிவாசன்

# (கிளி அக்கா)

# அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

" கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே "

என்று திருஞான சம்பந்த நாயனாரால் தேவாரம் பாடல் பெற்ற திருக்கோணமலையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட சைவவேளாளர் உயர் குடிதனில் செல்வசெழிப்புடன் விளங்கிய திரு முத்துக்குமாரு தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் இரண்டாவது மகளாக மதுராம்பிகை அவதரித்தார்.

அமரர். சித்திரவேலாயுதம், யோகாம்பிகை, மாணிக்கராசா, அமரர். சண்முகராஜா, ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, இவரின் உடன் பிறந்த அன்பு சகோதரங்கள் ஆவார்கள். பெற்றோரின் சகோதரங்களின் அன்பு அரவணைப்பில் பாசப்பிடிப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தேவதையாய், திருமணவயதை அடைய முன்னர் , திருக்கோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று கல்வியில் சிறந்து விளங்கினார்.

இவரை திருக்கோணமலையைச் சேர்ந்த கல்வி செல்வத்தில் மேம்பட்ட உயர் குடி தனைச் சேர்ந்த ரெட்ண வடிவேல் யோகரெட்ணம் தம்பதிகளின் மூத்த மகனான ஸ்ரீநிவாசனை கரம் பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவில் சிறந்தோங்கிய இவரின் கணவர் மக்கள் வங்கி முகாமையாளராக கடமை யாற்றியவர். கருத்து ஒருமித்த இத் தம்பதிகளுக்கு ஏழு மக்கள் செல்வங்கள்

உமாசங்கரி, உதயசங்கர், கீதாஞ்சலி, பிரபாகர், சக்தி அனுசுயா, சக்தி பிரதீபா, சக்தி நர்மதா என்பவர்கள் குழந்தை செல்வங்களாக இவர்களின் கல்வியில் மிகுந்த கவனம் செலுத்தி இவர்களை கல்விச் சீலராக வளர்த்தெடுப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றினார்.

உரியவயதில் ஆறு பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து சிவகுமார், உமாதேவி, சத்திய மூர்த்தி, நிரோ, ஸ்வானந், சுதாகர் ஆகியோர் அன்பு மருமக்களாகப் பெற்று மனநிறைவு பெற்றார். கடைசி மகளுக்கு நல்ல வரனை தேடி காத்திருந்தார்.

சமயப்பற்றும், மானுடநேயமும், சமூக உறவிலும் இவர் தன்நிறைவு பெற்றவர். உறவுகளுடனும், அயலவர்களுடனும் அன்பாயும் பாசமுமாயும் இருந்தவர்.

தன்னை விட மற்றவர்களை நேசிப்பதிலும் தேடி வந்தவர்களை மனம் நோகாமல் அரவணைப்பதிலும் சிறந்து விளங்கினார்.

பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் அன்பில் திளைத்து மனம் மகிழ்ந்து இருந்த போதுதான் அந்த நாளும் வந்தது.

காலனும் வந்தான் காலமும் போவென்று விரட்டியது நாமும் அழுதோம். இந்நாளில் அவரினை நினைத்து நாமொன்றாய் பிரார்த்தித்து அமரரின் ஆத்ம சாந்தியினை வேண்டுவோமே.

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சீரடிசாயிபாபா

4to40





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிர்டி சாய் பாபா அஷ்டோத்திர நாமாவளி (தமிழ்)

01. ஓம் சாய் நாதா போற்றி!
02. ஓம் தக்ஷிணாமூர்த்தி தத்தா அவதாரா போற்றி!
03. ஓம் சாகர சாய் போற்றி!
04. ஓம் பண்டரிபுர விட்டலா போற்றி!
05. ஓம் வெங்கட் ஸ்மரணா போற்றி!
06. ஓம் கிருக்ஷ்ணா ராமா சிவா மாருதி போற்றி!
07. ஓம் இறைவன் ஒருவனே என்பாய் போற்றி!
08. ஓம் பிறவிப் பிணி தீர்ப்பாய் போற்றி!
09. ஓம் மதங்களைக் கடந்த மகானே போற்றி!
10. ஓம் நாக சாய் போற்றி!
11. ஓம் வேண்டுவோர் துயர் தீர்க்கும் யோகியே போற்றி!
12. ஓம் க்ஷீரடி வாசா சித்தேஸ்வரா போற்றி!
13. ஓம் அற்புதங்கள் செய்யும் ஆண்டவா போற்றி
14. ஓம் முக்திக்கு வழி காட்டும் முனிவா போற்றி!
15. ஓம் உள்ளத்தின் உள்ளே உறைபவரே போற்றி!
16. ஓம் ஆனந்த மயமானவரே போற்றி!
17. ஓம் சரண் அடைந்தோரைக் காப்பவரே போற்றி!
18. ஓம் யாமிருக்கப் பயம் ஏன் என்பவரே போற்றி!
19. ஓம் விக்ஷ்ணு நாம பாராயண பிரியரே போற்றி!
20. ஓம் சித்திரத்தில் உயிருடன் பேசும் தெய்வமே போற்றி!
21. ஓம் மாயையாய் வீற்றிருப்பவரே போற்றி!
22. ஓம் கண்திருக்ஷ்டி பில்லி சூன்யம் தீர்ப்பவரே போற்றி!
23. ஓம் பிரம்மஞானம் அளிப்பவரே போற்றி!
24. ஓம் குருவார தேவா போற்றி!
25. ஓம் சம்சார பயங்களை போக்குபவரே போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஓம் துனியின் உதியே மருந்தென்பாய் போற்றி!
27. ஓம் பிரார்த்தனைக்கு இளகுவாய் போற்றி!
28. ஓம் எளிமை வடிவானாய் போற்றி!
29. ஓம் சகல லோக சஞ்சரியே போற்றி!
30. ஓம் முக்காலமும் உணர்ந்தவரே போற்றி!
31. ஓம் மும்மூர்த்தியின் திரு உருவே போற்றி!
32. ஓம் சகல ஜீவன்களிலும் இருப்பாய் போற்றி!
33. ஓம் மூன்றாம் பிறையில் தருவாய் போற்றி!
34. ஓம் முந்தைய வினைகளை அறுப்பவரே போற்றி!
35. ஓம் ஓம் சாய் ராம் மந்திரத்தின் சக்தியே போற்றி!
36. ஓம் மத வேறுபாடுகளை களைந்தாய் போற்றி!
37. ஓம் உண்மை அன்புக்கு மகிழ்பவரே போற்றி!
38. ஓம் அன்ன பாபாவே போற்றி!
39. ஓம் இல்லறமும் நல்லறமே என்பாய் போற்றி!
40. ஓம் இளமையிலே துறவியானாய் போற்றி!
41. ஓம் உலகெல்லாம் உன் நாமமே போற்றி!
42. ஓம் திக்ஷிணை பிரியரே போற்றி!
43. ஓம் திக்கெட்டும் நீயே போற்றி!
44. ஓம் திக்கற்றோருக்கும் நீயே போற்றி!
45. ஓம் சத்சரித சப்தஹத்தில் அருள்வாய் போற்றி!
46. ஓம் தன தான்யம் அளிப்பாய் போற்றி!
47. ஓம் சிந்தையிலே வந்தை செய்வாய் போற்றி!
48. ஓம் கனவிலும் காட்சி அளிப்பாய் போற்றி!
49. ஓம் நினைவிலும் காட்சி அளிப்பாய் போற்றி1
51. ஓம் த்வரகமாயி தெய்வமே போற்றி!
52. ஓம் சாவடியில் சயனிக்கும் சத்குருவே போற்றி!
53. ஓம் மகான்களின் தாதையே போற்றி!
54. ஓம் ஆனந்த நிலையை அருள்வாய் போற்றி!
55. ஓம் நம்பிக்கை பொறுமை காணிக்கையாய் கேட்பாய் போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. ஓம் வெங்குசாவின் சீடரே போற்றி!
57. ஓம் பலருக்கும் படியளக்கும் பகவானே போற்றி!
58. ஓம் வாக்குபலிதம் தந்திடும் சரஸ்வதியே போற்றி!
59. ஓம் வாழ்வாங்கு வாழ வாழ்த்திடுவாய் போற்றி!
60. ஓம் உனை மறவா வரம் தருவாய் போற்றி!
61. ஓம் கலங்குவோர் மனம் இடர் களைபவரே போற்றி!
62. ஓம் குழந்தைவரம் அருளும் குருவே போற்றி!
63. ஓம் அன்னையாய் தந்தையாய் ஆதரிக்கும் அருளே போற்றி!
64. ஓம் உங்கள் காலடியே எங்கள் ஷிர்டியாம் போற்றி!
65. ஓம் ஏறுபடைகொண்டு சிறப்புடன் வாழ வைப்பாய் போற்றி!
66. ஓம் காம குரோத மதமாச்சார்யம் தீர்ப்பாய் போற்றி!
67. ஓம் காசி பிரயாகையை கால்விரலில் காட்டியவரே போற்றி!
68. ஓம் தீபங்களை ஏற்றி பாவங்களை போக்கினாய் போற்றி!
69. ஓம் தினம் தினம் தியானிப்பவர்க்கு சாய்லக்ஷ்மி ரூபமானாய் போற்றி!
70. ஓம் ஷீரடியே பண்டரிபுரம் என்றாய் போற்றி!
71. ஓம் அன்பால் உலகம் முழுவதும் ஒற்றுமை ஆக்கினாய் போற்றி!
72. ஓம் ஐந்து ப்ராணங்களை ஜோதியாய் ஏற்றி வைத்தாய் போற்றி!
73. ஓம் ஆருத்தி எடுப்பவரின் ஆறாத்துயர் தீர்ப்பாய் போற்றி!
74. ஓம் அருளாசியை பிரசாதமாய் அளிப்பாய் போற்றி!
75. ஓம் சுமைகளை ஏற்று பகைமையை போக்குவாய் போற்றி!
76. ஓம் கண்ணொளி தந்து காதொலி கேட்கச் செய்வாய் போற்றி!
77. ஓம் சரணம் அடைவோருக்கு கமலபாதம் காட்டுவாய் போற்றி!
78. ஓம் காலை ஆரத்தியில் கருணாமூர்த்தி காட்சி ஆவாய் போற்றி!
79. ஓம் நிலையான ஞானம் நிலைக்கச் செய்வாய் போற்றி!
80. ஓம் சியாமா தாஸ்கனு மாகல்ச தாத்ய சத்குருவே போற்றி!
81. ஓம் அல்லா ஏசு அன்னை அனைத்தும் ஆனாய் போற்றி!
82. ஓம் பக்திக்கேற்ற பலன் அளிப்பாய் போற்றி!
83. ஓம் மனதிற்கேற்ற வாழ்க்கைத்துணை நலம் அளிப்பாய் போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஓம் எப்பிறவியிலும் உன்னை ஏற்க வைப்பாய் போற்றி!
85. ஓம் யாகம் யோகம் ஏதுமின்றி மோட்சம் தரும் குருவே போற்றி!
86. ஓம் எல்லா மகான்களும் என் ரூபம் என்பாய் போற்றி!
87. ஓம் அன்னதானமே பிறவி நோய் தீர்க்கும் மருந்தென்பாய் போற்றி!
88. ஓம் கூட்டுப் பிரார்த்தனையில் குலம் வாழ வைப்பாய் போற்றி!
89. ஓம் உன்னைப் போற்றுவோரை உலகம் போற்ற வைப்பாய் போற்றி!
90. ஓம் இசையில் இணைந்து வருவாய் போற்றி!
91. ஓம் அன்ன வஸ்திரங்களை அளவின்றி கொடுப்பாய் போற்றி!
92. ஓம் கோதாவரி நதி தீர கோயில் கொண்டாய் போற்றி!
93. ஓம் பூட்டிமாளிகை அலங்கரிக்க முரளிதரனானாய் போற்றி!
94. ஓம் வியாழ பூஜையில் வல்வினை நீக்கும் வியாழ மூர்த்தியே போற்றி!
95. ஓம் பரந்தாமா பரமேஸ்வரா பரமாச்சார்யா போற்றி!
96. ஓம் கண்கண்ட தெய்வமே கணபதியே போற்றி!
97. ஓம் பௌர்ணமி பூஜையில் பாவங்களை அழித்து நற்பலனருள்வாய் போற்றி!
98. ஓம் பாரிஜாத மலரே கற்பகத்தருவே காமதேனுவே போற்றி!
99. ஓம் நவகோள்களால் நன்மையும் நாவன்மையும் பெற வைப்பாய் போற்றி!
100. ஓம் தன்வினை நோய் தீர்க்கும் தன்வந்திரியே போற்றி!
101. ஓம் மீனாட்சி பக்தனை நீ ஆட்சி செய்தாய் போற்றி!
102. ஓம் நம்பினோரை கைவிடாத நாயகனே போற்றி!
103. ஓம் ராஜராமா நாமமே தாரக மந்திரமென்பாய் போற்றி!
104. ஓம் அன்புக்கு அருள் நல்கும் அறிவே போற்றி!
105. ஓம் ராதாகிருஷ்ணா சீதாராமா லக்ஷ்மி நாராயணா போற்றி!
106. ஓம் ஸ்ரீநிவாசா ஸ்ரீ வேங்கடேசா ஸ்ரீரங்கா போற்றி!
107. ஓம் சிவரூபா ஹரிஹரா சுப்ரமண்யா போற்றி!
108. ஓம் சகலமும் சத்குரு சாயிரூபமே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாய்ராம்

# ஸ்ரீ சீரடிசாயிபாபாவின் உறுதி மொழிகள்

1) சீரடியில் காலடி படும் பக்தனிற்கு வரும் ஆபத்து விலகிவிடும்
2) என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துன்பங்களையும் நான் போக்குவேன்.
3) இவ் உலகைவிட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடி வருவேன்
4) திட பக்தி, நம்பிக்கை, விசுவாசத்துடன் யாசிப்பவர் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்
5) இன்னும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுது உணர்ந்து இதனை சத்தியம் என்றறிந்து அனுபவம் பெறுவீர்
6) என்னை சரணடைந்தும் வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்கு காண்பியுங்கள்
7) பக்தர் என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணர்கிறானோ அப்படிப்பட்ட அனுபவங்களை அவனுக்கு தருவேன்.
8) எப்போதும் உங்கள் சுமைகளை நான் சுமக்கிறேன். என்வாக்கு பொய்யாவதில்லை
9) நீங்கள் கேட்பதையெல்லாம்நான் கொடுப்பேன் என் உதவியையும் அருளையும் அள்ளித்தர நான் காத்திருக்கிறேன்.
10) பக்தியுடன் என் மொழிகளை மனதில் ஏற்பவனிற்கு நான் கடன்பட்டவன் ஆவேன்
11) என் திருவடிகளை அடைந்த பக்தன் பெரும் பாக்கியவான் ஆவான்.

சாயின் ஆணைக்கு
அமைய
உ.கவிதாஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓம் ஸ்ரீ சாய்ராம்**

**சாயி சத்சரிதம்**

**அத்தியாயம் - 08**

மானிட உடம்பின் தனிச்சிறப்பு

நாம் அனைவரும் அறிந்த படியாக சர்வ ஜீவராசிகட்கும் நான்கு விடயங்கள் பொதுவானதாகும். அதாவது உணவு, உறக்கம், பயம், புணர்ச்சி முதலியவை ஆகும். மனிதனுடைய விடயத்தில் அவன் ஒரு சிறப்பான சாமர்த்தியத்துடன் இயற்கையாகவே ஆக்கப்பட்டிருக்கிறான். அதாவது மற்றெல்லாம் பிறப்பாலும் அடையப்பட இயலாத ஞானத்தின் மூலம் அவன் கடவுள் காட்சியைப் பெறலாம். இக் காரணத்தினாலேயே தேவர்கள் மனித உரிமையை குறித்து பொறாமைப்படுகிறார்கள் தங்கள் முடிவான விடுதலையைப் பெற மானிடர்களாக பிறக்க ஆவல் கொள்கிறார்.

கேவலமான அழுக்கு, சளி கோழை, அசுத்தம் இவைகளால் நிரம்பியதும் தேய்வு, நோய், மரணம் ஆகிய வற்றிற்கு காரணமாய் உள்ளதுமான இம்மனித உடம்பை விடக் கேவலமானர் எதுவும் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். இது ஓரளவுக்கு உண்மை என்பதில் ஐயமில்லை. இவ்வாறான குற்றங் குறைகள் இருப்பினும் இம்மனித உடம்பின் சிறப்பான மதிப்பு யாதெனில் ஞானத்தை அடைய மனிதனிற்கு ஆற்றலுண்டு என்பதே யாகும். அதன் அசுத்த தன்மைக்காக நாம் உடம்பை புறக்கணித்தால் கடவுள்காட்சியை பெறும் வாய்ப்பை இழப்போம். அதையே சீராட்டி புலன் இன்பங்களின் பின்னால் ஓடினால் அது விலைமதிப்பு அற்றதால் நாம் நரகிடை வீழ்வோம்.

இவ்வுலக உயிர்களிலும் மனிதனாய் பிறத்தல் உண்மையில் நல்ல அதிர்ஷ்டமாகும். அதை விட மிகச் சிறப்பான அதிர்ஷ்டம் சீரடி சாயிநாதரின் பாதங்களே. தஞ்சம் என சரணாகதி அடைவது

ஸ்ரீ சாயியைப் பணிக

அனைவருக்கும் சாந்தி நிலவட்டும்

"ஓம் அகண்ட கோடி பிரம்மாண்ட நாயக ராஜாதி ராஜ யோகிராஜ பரப்பிரம்ஹ ஸ்ரீ சாயிநாத் மஹராஜ்கி ஜெய் "

சாயின் ஆணைக்கு

அமைய

உ.கவிதாஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அன்னை

அன்னைக்கு முன் எதையும் காணவில்லை!
அன்னைதான் முன்கண்ட தெய்வமாகும்!
என் அன்னை வயிறே என் ஆதி வீடு!
ஈரைந்து மாதம் நான் இருந்த கோயில்!
பின்னுமவள் மடிதுயிலே பெரிதுவந்தேன்!
பெற்றெடுத்த பின்னுமவள் பேணி வந்தாள்!
கன்னத்தில் கன்னம் வைத்தன்பு செய்தாள்!
கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தாள்!

தாலாட்டுப்பாடி அவள் தூங்க வைத்தாள்!
தலையணையும் ஒருபக்கம் தானுமானாள்
பாலூட்டி பகலிரவின் பசிகள் தீர்த்தாள்!
பாசமொடும், அன்போடும் பார்த்து வந்தாள்!
காலூன்றிக் கைபிடித்துக் காதலித்தாள்!
கட்டியணைத்தெனைத் தூக்கிக் கதைகள் சொன்னாள்!
மேலான தந்தையையும் விளங்க வைத்தாள்!
மேதினியில் தெய்வமெனும் மேன்மையுற்றாள்!

இறப்புலகு சென்றாளேல் எந்தன் அன்னை
என்இதயம் உள்ளவரை இந்த மண்ணில்
மறப்பேனா, இங்கவளை மறந்துய்வேனா?
மாற்றாளை அன்னை எனக்கொள்ளுவேனா?
துறப்பேனா அவள் பாசம்? பெருமையெல்லாம்
சொல்வேனா, மொழியாலே சொல்லலாமா?
பிறவாளா மீண்டுமவள்? யானும் மீண்டும்
பிறவேனா அவள் வயிற்றில் பொறுமையோடே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்று நோய்

டாக்டர். எஸ்.எம்.பாலாஜி

## வாயில் ஏற்படும் புற்றுநோய்!

வாய்ப் புற்று நோய் அதிகமாக உதட்டையும், நாக்கையும், வாயின் அடிப்பகுதியையும், கன்னத்தையும் மற்றும் உமிழ் நீர் சுரப்பியையும் தாக்குகிறது. நமது உடல் உறுப்புகள் அனைத்தும் மாறுபட்ட பல்வகை திசுக்களால் ஆனது இவைகள் ஒரு குறிப்பிட்ட வயது வரை வளர்ந்து பின்னர் சிதைந்து விடும். இப்படி சிதையும் திசுக்களை ஈடு செய்ய புதிய திசுக்கள் வளரும், உடலில் உள்ள அங்கங்களுக்கேற்ப திசுக்கள் வளரும் உடலில் உள்ள அங்கங்களுக்கேற்ப திசுக்கள் வளர்ந்தும் சிதைந்தும் கொண்டிருக்கும் இதனால் உடல் உறுப்புகளுக்கு உருவமைப்பு அமைகிறது. திசுக்களின் பெருக்கத்திலும் வளர்ச்சியிலும் சிதைவிலும் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால். உடலில் கட்டிகள் அல்ல கழலைகள் உருவாகும்.

இவ்வாறு உருவாகும் கட்டிகள் இரண்டு வகைப்படும்.

1. உயிருக்கு ஊறு விளைவிக்காத கட்டிகள் அல்லது கழலைகள் பொதுவாக இம்மாதிரியான கழலைகளை சுற்றி ஒரு உறை இருப்பதால், உடலின் மற்ற இடங்களுக்குப் பரவுவதற்கான வாய்ப்பு கிடையாது.

2. உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் தன்மையுடைய புற்று நோய்க் கட்டிகள் இவை விரைவில் மற்ற உறுப்புகளுக்குப் பரவும் குணமுடையது உடலின் எந்தப் பகுதியிலும் ஏற்படும் புற்று நோய்களில் வாய்ப் பகுதியில் தோன்றும் புற்று நோயே அதிகம்.

வாயில் புற்று நோய் தோன்றுவதற்கு, குறிப்பிட்ட காரணங்களோ அல்லது நோய்களோ என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால் அவை எளிதில் உருவாகக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் நிலைகளைப் பற்றி விவரிக்க இயலும்.

மது அருந்துவதும் புகைப்பிடிப்பதும் இணையும் பொழுது வாயில் புற்று நோய் தோன்றலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலை, வெற்றிலை, பாக்கு போன்றவை சிலரால் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

வாயில் வெகு நேரம் வெற்றிலை கலவை வைத்திருந்தால், கன்னப்பரப்பில் புண்கள் உண்டாகி நாளடைவில் புற்று நோயாக மாறும் வாய்ப்புள்ளது. புகை பிடிப்பது. நம் நாட்டில் வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால் மேல் உதடும்.கீழ் உதடும் சேரும் இடத்திலும் மற்றும் மேல் அண்ணத்திலும் புற்று நோய் தோன்றலாம். ஆந்திராவில் சுருட்டைக் கொளுத்தி நெருப்பு உள்ள பகுதியை வாயில் புகைப்பார்கள் இந்தப் பழக்கம் மேல் அண்ணப் புற்று நோய் ஏற்பட காரணமாகின்றது.

வெகு நாளாக வாயில் உறுத்தும் கூரான சொத்தைப் பற்கள், பல் செட்டுகள், ஒழுங்கற்ற பல்லடைப்புகள் போன்றவைகள் புற்றுநோய் உண்டாக்கும் சூழ்நிலையை உருவாக்குகின்றன. அதிக அளவில் கடினமான சூரிய வெப்பத்தில் இருக்கும் விவசாயிகள் மற்றும் மாலுமிகள், உதட்டில் புற்று நோய் ஏற்படலாம். உடலில் தடுப்பு சக்தி அதிக அளவில் இல்லாதவர்களுக்கு மிகவும் குறைந்த வருவாய் பெறுபவர்களுக்கு வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், மற்றும் இரும்புச் சத்து போன்ற உணவுக் குறைபாடு இருப்பதால் புற்று நோய் வரும் வாய்ப்பு உண்டு. அதிகக் கார உணவு உட்கொள்வதால் வாயை விட வயிற்றில் தான் புற்றுநோய் தோன்றலாம் நாளமில்லா சுரப்பி கோளாறு அதாவது உடம்பில் ஹார்மோன்களின் குறைபாடுகளால் கூட இவை உருவாகலாம். சில நச்சுயிர்களும் புற்று நோயை உண்டாக்கும் வல்லமை படைத்தது.

வாய்ப்பு புற்று உருவாகி, பிற உறுப்புகளை பாதிக்கும் முன்பே அவற்றைக் கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டும் பெரும்பாலான புற்று நோய் வரும் முன் அதற்கான சில அறிகுறிகள் தோன்றும்.

முதலில் தொடர்ச்சியான உறுத்தலினால், வாயில் வெண்படலம் தோன்றும் இது வாயின் ஒரு பகுதியிலோ அல்லது பரவலாகவோ தோன்றலாம். பெரும்பாலும் கன்னம் நாக்கு, உதடு, ஈறு போன்ற இடங்களைத் தாக்கும். இந்த வெண்படலத்தை எந்தக் கருவியும் கொண்டு நீக்க முடியாது இந்த வெண்படலத்தைக் கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல்களினால் உணர முடியாது. சில நேரத்தில் இந்த வகையான வெண்படலங்கள் தடித்து வெடிப்புகளுடன் விரல்களினால் உணரலாம். இவை அதிகமாக புகையிலை போடுபவர்களுக்கும் பழுப்பு நிறத்தில் இருக்கும் தடித்து வெடித்து இருக்கும் வெண்படலம் மிக விரைவில் வளரும் தன்மையுடையது. எல்லா வகை வெண்படலங்களும் புற்று நோயாக மாறுவதில்லை. மைக்ராஸ் கோப்பில் இந்தத் திசுக்களைப் பரிசோதித்தால் அதன் பல்வேறு அமைப்பிற்கேற்ப இவற்றை வரிசை படுத்தலாம்.

இவ்வகை வெண்படலம் நார் திசு இறுக்கமாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது. இதனால் வாய் பூட்டு நோய் (Trismus) ஏற்பட்டு உணவு உட்கொள்வதற்குக் கடினமாகும். இந்நிலை இந்தியாவில் தான் அதிகமாகக் காணப்படுகிறது. நார் திசு இறுக்கம் தோன்று வதற்குப் பல்வகைக் காரணங்கள் உள்ளன. ஆனால் எதுவுமே தெளிவாகக் கூற இயலவில்லை. இந்நோயால் பாதிக்கப்பட்ட வர்களின் வாயில் அதிக எரிச்சல் அடிக்கடி புண் தோன்றுதல், அளவிற்கு அதிகமாக உமிழ்நீர் சுரத்தல் போன்றவை ஏற்படலாம். நார் திசு இறுக்கம் புற்றுநோயாக மாற அதிக வாய்ப்புள்ளது. இந்நோய்களுக்கு வைட்டமின் ஏ, பி காம்பளக்ஸ், ஈஸ்ட்ரோஜன் கார்ட்டிஸோன் மற்றும அறுவை சிகிச்சை போன்றவை உலகில் கையாளும் மருத்துவ மாகும்.

புற்று நோய் தாக்கிய திசுக்களைச் சுற்றி உறை இல்லாததால், இது விரைவில் அருகில் உள்ள மற்ற உறுப்புகளுக்கு ஊடுருவும் இதனால் உயிருக்கு ஊறு விளைவிக்கும். புற்று நோயை அறுவை சிகிச்சையினால் அகற்றினாலும் அது மீண்டும் வளரும் தன்மையுடையது. ஆனால் தீங்கற்ற கழலைகள் ஒரு முறை அகற்றினால், திரும்பவும் தோன்றாது. புற்றுநோய் பிற உறுப்புகளுக்கு இரத்தக் குழாய் மூலமும் நிணநீர் மூலமும் விரைவில் பரவும். இப்படி பரவிய பின்பு சிகிச்சை அளிப்பது மிகவும் கடினமாகும்.

உதட்டுப் புற்று நோய் மேல் உதட்டைவிட கீழ் உதட்டை அதிக அளவில் தாக்கும். இது ஆரம்பத்தில் தடித்து பின்னர் புண்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டிலிருந்து புற்று நோய் மற்ற உறுப்புகளை எளிதில் தாக்கும் பொழுது. முதலில் ஒரு சிறு கட்டியாகதான் தோன்றும் பின்னர் முழு நாக்கையே பாதிக்கும் இதன் இறுதி நிலையில் ருசி பார்க்கும் தன்மை இழந்து விடும் மற்றும் உணவை விழுங்க இயலாது. நாக்கில் வலி தோன்றுதலோடு அசைக்க இயலாமல் போய் விடும்.

வாயின் அடிப்பகுதியில் புற்றுநோய் தோன்றினால், இது எளிதில் தாடை, ஈறு முதலிய உறுப்புகளை தாக்கும் பரவும் தன்மை அதிகமாக உடையது. புற்றுநோய் அதிக அளவில் கன்னத்தைத் தாக்கும் மேல் பற்களுக்கும் கீழ் பற்களுக்கும் இடையே சிக்கும் பாகம் புற்று நோயாக மாற வாய்ப்பு படைத்தது. வாயில் எரிச்சல் அதிகமாக இருப்பதோடு ஒரு வித துர்நாற்றம் தோன்றும் புண்கள் மேல் வெண்படலம் மூடியிருக்கும்.

புற்றுநோய், கீழ்தாடை ஈறைதான் அதிகமாக தாக்கும் முதலில் சிறு கட்டிகளாக தோன்றி பின்பு வெடித்து புண்களாக மாறிவிடும். பின்னர் அதையொட்டியுள்ள பற்கள் அசையத் தொடங்கும் அண்ணப் புற்றுநோய் பெரும்பாலும் தலைகீழ் புகைப்பிடிக்கும் பழக்கத்தினால் தான் ஏற்படும். இந்நோய் பரவிமேல் தாடை, மூக்கடு புறை போன்ற பகுதிகளை தாக்கும்.

புற்று நோய் தவிர தாடையில் பலவித கழலைகள் வருவது காணலாம். இவற்றில் தாடை எலும்பு கழலை முக்கியமானதாகும். இக்கலையின் திசுக்கள் பற்களின் எனாமல் உருவாகும் போதும், பல் நீர் கட்டிகள் சரிவர அறுவை சிகிச்சை செய்து எடுக்காத போதும் எஞ்சி உள்ள திசுக்களிலிருந்து உருவாகிறது. இவ்வகைக் கட்டிகள் மேல் தாடையைவிடகீழ் தாடையில் அதிகமாகக் காணப்படும். இவை மிகவும் மெதுவாக வளரும் தன்மையுடையவை துவக்கத்தில் ஈறின் மேல் கடினமான சிறு கட்டியாக தென்படும் கட்டியின் அளவு பெரியதாகும்.பொழுது நாளடைவில் எல்லா எலும்பு பகுதியும் அழிந்துவிடும். இக்கட்டியினால் பாதிக்கப்பட்ட தாடையில் உள்ள பற்கள் அசையும். அறுவை சிகிச்சை செய்து இக்கட்டியையும் அதைச் சார்ந்த நல்ல எலும்புப் பகுதியையும் நீக்குவது நலமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்று நோயின் அறிகுறிகள் தோன்றும் பொழுதே அதற்கு சிகிச்சை பெறுவது நன்மையாகும். அதைவிட இந்நிலை வராமல் தடுப்பதே மிக மிக நன்மையாகும். புகை பிடித்தல் வெற்றிலை பாக்கு புகையிலை போன்ற வாய்க்கு மட்டுமின்றி உடலுக்கும் தீங்கு விளைவிக்கும் பொருட்களை உபயோகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

வாயில் வெகுநாளாக உறுத்திக் கொண்டு கூர்மையான பல் செட்டுகளோ, சொத்தைப்பற்களோ இருந்தால் அதை உடனே பல் மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெற வேண்டும். இதைத் தவிர வாயில் ஏற்படும் மற்ற நோய்களுக்கு உடனே சிகிச்சை செய்ய வேண்டும். காரவகை உணவுகள் மற்றும் மது அருந்துவதை உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும்.

புற்றுநோய்க்கு அதன் நிலைகளுக்கு ஏற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது. தீங்கற்ற கழலைகளை அறுவை சிகிச்சை மூலம் நீக்கி விடலாம். அதிகமாக பரவி உள்ள இடங்களில் கதிர் வீச்சின் மூலம் குணப்படுத்தலாம். கழலைகள் புண்களாக மாறாமல் இருக்க ஆன்ட்டிபயாடிக் கொடுக் வேண்டும். மற்றும் புற்றுநோயில் உள்ள திசுக்கள் மீண்டும் பெருகாமல் இருக்க நைட்ரஜன் மஸ்டாடு பயன்படுத்த வேண்டும். தாடையில் புற்று நோய் ஒரு குறுகிய இடத்தைத் தாக்கி இருந்தால், அதனையும் அதைச் சுற்றி உள்ள நல்ல எலும்பையும் எடுக்க வேண்டும் பரவலாக இருந்தால் சில வேளையில் தாடையின் பாதி பகுதியை எடுக்கும் நிலை நேரிடும் பின்பு தாடையின் வடிவில் இருக்கும் தட்டுகள் மூலம் முகத்திற்குப் பழைய உருவத்தை உருவாக்கலாம்.

**மருத்துவர்களின் ஆலோசனையின்றி மருந்துகள் உபயோகிக்க கூடாது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் கற்போம்

1) அதிகூடிய வயதில் 100 m ஓட்டம் ஓடி சாதனை படைத்தவரின் வயது என்ன? சானிஸ்லோ கொவால்ஸ்கி (105 வயது)

2) 100 cm தூரத்தை 9.27 Second களில் ஓடிக்கடந்து சாதனை படைத்தவர் யார்? உசைன் போல்ட்

3) *உலகில் உயிர் வாழ்கின்ற உயரமான மனிதன் யார்? சுல்தான் கொசைன் (2.51m)

4) கிரிக்கெட்டில் 161 Inningse இல் 7000 ஓட்டங்களை கடந்த வீரர் யார்? விராட் கோலி

5) உலகின் அதிகூடிய எடையுள்ள பூசணிக்காயை உற்பத்தி செய்த நாடு எது? அமெரிக்கா

6) உலகின் பெரிய நீல மணிகளுள் ஒன்று அண்மையில் இலங்கையில் கண்டிடெடுக்கப்பட்டது. அதன் எடை யாது? 485 g

7) உலகினிலே மக்கள் வாழாத தீவு எது? கிறீன்லாந்து

8) உலகின் மிகவும் உயரமான மனிதரின் உயரம் என்ன? (தற்பொழுது உயிருடன் இல்லை) 281 cm

9) உலகின் முதலாவது பெண் பிரதமர் யார்? ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) உலகின் முதலாவது கூட்டற் பொறியை கண்டறிந்தவர் யார்? பிளேசில் பஸ்கால் (1642)

11) 1812ல் பிரித்தானியாவில் பாதுகாப்பான விளக்கினை கண்டு பிடித்தவர்? ஹம்பிறிடேவி

12) 1785ல் நீராவியால் இயங்கும் "மியூல இயந்திரம்" யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? எட்மன் காட் ரைட்

13) மனித உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை? 206

14) இலங்கையிலுள்ள கல்யாணி நதியின் தற்போதைய பெயர் யாது? களனி கங்கை

15) தொலைபேசியைக் கண்டுபித்தவர் யார்? அலெக்சாண்டர் கிரகம்பெல்

16) தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் யார்? கலிலியோ கலிலி

17) நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர் யார்? ஜோர்ஜ் ஸ்டீவன்சன்

18) 1903ல் விமானம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? ரைட் சகோதரர்கள்

19) அண்மையில் ஐமரசன் குண்டை பரிசோதனை செய்த நாடு? வடகொரியா

20) மனித நுரையீரலிலுள்ள சுவாசச்சிற்றறைகளின் எண்ணிக்கை? $700 \times 10^{C}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) சுவாசசிற்றறை ஒன்றின் பரப்பு யாது?

$70 - 80m^2$

22) உடலில் $CO_2$ காவப்படும் பிரதான வடிவம் யாது?

இருகாபனேற்று ($HCO_3^-$)

23) மனிதனின் விஞ்ஞானப் பெயர் யாது?

Homo Sapiens Sapiens

24) கண்ணின் அசைவுகளை ஏற்படுத்தும் தசைகளின் எண்ணிக்கை யாது? 6 தசைகள்

25) பால்டிக் கடலின் சராசரி ஆழம் யாது? 55m

26) பிறந்த குழந்தையை அழச் செய்வதன் நோக்கம் யாது? குழந்தை அழுகையில் சுவாசப்பை சுருங்கி தளர்வதால் சுவாசப்பை இயக்கம் சீராக்கப்படும்.

27) கரப்பான் பூச்சியின் குருதியின் நிறம் யாது? காரணம்?

வெள்ளை, செங்குருதிக் கலன்கள் காணப்படாமை

28) மின்குமிழ் எரியும் போது உருவாகும் வெப்பத்தின் அளவு யாது? $1700^0C$

29) வௌவாலின் செவிப்புலவீச்சு யாது? 30.000-70.000 Hz

30) HIV Virus இனால் அழிக்கப்படும் குருத்திக்கலம் யாது?

$T_4$Iymphocyte



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## அமரர்
## திருமதி.மதுராம்பிகை ஸ்ரீநிவாசன்
## (கிளி அக்கா)

**ரெட்ண வடிவேல்** + **யோகரெட்ணம்**
→ ஸ்ரீனிவாசன்
→ மகேந்திரன் (அமரர்)

**முத்துக்குமாரு** + **தெய்வானைப் பிள்ளை**
→ சித்திரவேலாயுதம் (அமரர்)
→ **மதுராம்பிகை (அமரர்)**
→ கமலாம்பிகை
→ மாணிக்கராஜா
→ சண்முகராஜா (அமரர்)
→ ராஜேஸ்வரி
→ பரமேஸ்வரி

ஸ்ரீனிவாசன் + மதுராம்பிகை →

- உமாசங்கரி + சிவகுமார்
  - → பாலபிரசன்னா + லக்ஷி
  - → பிரியா + அச்சுதன் → அஞ்சனா, அம்சித்
  - → ஜனனி
  - → சஜிகீர்த்தனா
- உதயசங்கர் + உமாதேவி → கவிதாஞ்சலி, நசிகேதன்
- கீதாஞ்சலி + சத்தியமூர்த்தி → லோஷினி, கிருஷாலினி
- பிரபாகர் + நிரோ → ஷியாம், சரணி
- சக்தி அனுசுயா + லவானந் → கிருஷோத், பிரதீவ், சுபிஷன்
- சக்தி பிரதீபா + சுதாகர் → அபிராமி
- சக்தி நர்மதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.

## திருமதி.மதுராம்பிகை ஸ்ரீநிவாசன்

**(கிளி அக்கா)**

**18.01.2016 அன்று அமரத்துவம்**

**அடைந்த எங்கள் தேவதையின்**

**மறைவின் போது உடன் வந்து**

**உதவியோருக்கும், இறுதிச் சடங்கில்**

**பங்கு கொண்டோர்க்கும், எல்லா**

**வகையிலும் உதவி செய்த நெஞ்சங்களுக்கும்**

**எமது இதயபூர்வமான நன்றிகள்**



**குடும்பத்தினர்**

இல. 457
கடற்படைத் தளவீதி
திருக்கோணமலை


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on.

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



SS D 004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org